**தலைப்பு 13 – இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 13 – இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 05 ஆந் திகதி ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 186.50 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 168.64 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான ரூபா 17.86 மில்லியன் அதாவது 9.58 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 172.20 | 159.91 | 12.29 | 7.14 |
| மூலதனம் | 14.30 | 8.73 | 5.57 | 38.95 |
| மொத்தம் | 186.50 | 168.64 | 17.86 | 9.58 |

## 2.2 கணக்காய்வு அவதானிப்புக்கள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

ஆணைக்குழுவினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை, தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (ii) | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (iii) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |

**3.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.2.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

அரசின் கொள்வனவு வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்வதற்கு வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 5.15 மில்லியன் நிதிஏற்பாடு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்துவதற்காக 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

ஆணைக்குழுவின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

01 வாகனம் விளைவற்றுக் காணப்பட்டதுடன், 05 வாகனங்கள் குறைப்பயன்பாட்டுடன் இருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்**

2015 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 இணங்காமைகள்**

**(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (i) | சட்டரீதியான ஏற்பாடுகள் | |
| | 1996 இன் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 30 ஆம் பிரிவு | 2015 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| | * நிதிப் பிரமாணம் 802(3) | வாகனங்கள் தொடர்பாக அவை கொள்வனவு செய்யப்பட்ட திகதி, விலை, அவ்வப்போது செய்யப்பட்ட திருத்தங்கள், அதற்காக ஏற்பட்ட |

| | | |
|---|---|---|
| | | செலவினம், விளைவற்ற காலம் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| * | நிதிப் பிரமாணம் 1647(ஆ) | ஆணைக்குழுவிடமுள்ள வாகனங்கள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | பொது நிர்வாக சுற்றறிக்கை<br>----------------------------------------------<br>1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | 06 மாதங்களுக்கு ஒரு முறை ஆணைக்குழுவின் வாகனங்களின் எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

**(ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

--------------------------------------------------------------------

பெறுமதி சேர் வரி அடிப்படையிலான வரிக் கொடுப்பனவுகளுக்குரிய விபரங்கள் அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறை வரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 செயலாற்றல்**

----------------------

2015 இன் வருடாந்த பாதீட்டு மதீப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

**(அ) திட்டமிடல்**

--------------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) ஆணைக்குழுவிடமுள்ள 10 பிராந்திய அலுவலகங்கள் மற்றும் 03 நடமாடும் அலுவலகங்கள் காணப்பட்டதுடன், அந்த அலுவலக முறைமைகளை விரிவுபடுத்துதலும் விரிவாக்கலும்.

(ii) ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களின் காப்புறுதி முறைமையை மிகவும் வினைத்திறனான முறையில் மேம்படுத்துதல்.

(iii) வெளிநாட்டிற்கு குடிபெயர்வோர் குடிவருவோரின் மனித உரிமைகழளை பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுத்தல்.

(iv) மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பொறிமுறையை பலப்படுத்துவதற்காக தலைமை அலுவலகத்தின் கணனி முறைமை மற்றும் பிராந்திய அலுவலகங்களின் கணனி தரவு முறைமைகளை இணைத்தல் (Link)

## 3.6 வங்கிக் கணக்கினை செயற்படுத்துவதிலான குறைபாடுகள்

### செயலற்ற வங்கிக் கணக்குகள்

ஆணைக்குழுவினால் பராமரிக்கப்பட்டு வரும் 02 நடைமுறைக் கணக்குகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக செயலற்றுக் காணப்பட்டன. அக்கணக்குகளில் முறையே ரூபா 48,947 மற்றும் ரூபா 252,953 என மொத்தம் ரூபா 301,900 ஆன மீதிகள் காணப்பட்டன.

## 3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

ஆணைக்குழுவினால் முறையான அங்கீகாரமொன்றில்லாமல் சுழற்சி நிதியமொன்றின் மூலம் 2015 ஆம் ஆண்டின் போது 16 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2,835,050 ஆன இடர் கடன் வழங்கப்பட்டிருந்தன.

## 3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2006 திசெம்பர் 06 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.3(ஆ) பிரகாரம் சட்டரீதியல்லாத ஏதேனும் நிதியமொன்று இருந்தால் அதனைப் பராமரிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால் அத்தகைய நிதியம் பாராளுமன்ற அதிகாரச்சட்டமொன்றின் மூலம் சட்டரீதியாக்குவதற்கு முடியுமான வகையில் உரிய காரணங்களைக் குறிப்பிட்டு அரச நிதித் திணைக்களத்திற்கு அறிக்கையிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யாமல் 2014 திசெம்பர் 26 ஆந் திகதி செயற்திட்டங்களுக்காக கிடைத்த பணத்திலிருந்து 04 வங்கிக் கணக்குகளில் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 695,355 தொகை சுழற்சி நிதியத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் 53,000 புத்தகங்கள் ரூபா 1,979,000 செலவு செய்து அச்சடிக்கப்பட்டிருந்ததுடன், அப்புத்தகங்களை பகிர்ந்தளித்தல் தொடர்பான தகவல்கள் முறையாக புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. எஞ்சியிருந்த 5520 புத்தகங்களைப் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தும் வசதிகள் அலுவலகத்திடம் காணப்படவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

## 3.10 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 46 | 16 | 30 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 11 | - | 11 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 135 | 69 | 66 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iv) | ஆரம்ப நிலை | 41 | 40 | 01 | - |
| (v) | ஏனையவை | - | 36 | - | 36 |
| | | -------- | -------- | -------- | ------- |
| | மொத்தம் | 233 | 161 | 108 | 36 |
| | | ==== | ==== | ==== | ===== |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

36 பதவியணியினர் மேலதிகமாக காணப்பட்ட போதிலும் ஆணைக்குழுவினால் அம்மிகை பதவியணியினருக்காக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தவறியிருந்தது.